முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1152

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.11.2022, வியாழக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்கார மகா சூட்சுமமே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே உந்தனுக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது தேள் திங்கல் உரைப்பேன்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 08 ம் நாள் 24.11.2022, வியாழக்கிழமை)
அருளுவேன் அரங்கன் சக்தி இன்னும் பெருக
வாசிவென்ற ஞானியர் படைகளோடு
வையகத்தை தர்ம வள்ளலாக பாதுகாக்கும்
3. காக்கின்ற அரங்கனே கலியின்
பாதுகாப்பு கொண்டதொரு ஞானியாகும்
அழியாமை தந்து கலியின் துன்பங்களை அகற்றி
வழிகாட்ட வல்ல மகா தவசியாகும்
4. தவசி அரங்கன் திருவடி பற்றி
தரணியோர் தர்மத்தை செய்து வந்தால்
அவனியில் தர்ம ஞான ஆட்சிதானும்
அரங்கனால் சடுதி அமையக்கூடும்
5. வரம் பெற்று உலகோர்
ஞானவான்களாக வலம் வந்து
அரங்கன் அவதார நோக்கம்
பூர்த்தி செய்ய நேரும்
6. நேர்மை கொண்ட மக்களைக்கொண்டு தான்
ஞான தேசிகன் வழி ஆறுமுகன்
பேருலகை மாற்றம் செய்ய இருக்கின்றேன்
பிரணவக் குடில் நோக்கி வந்து அன்னதனால்
7. உலக மக்கள் அரங்கன் கொள்கை ஏற்று
உயர்வாக தர்மத்தை முழுமைபட செய்து
தயவாக சன்மார்க்க வழி நடந்தால்
தரணிக்கு மாற்றம் சடுதிசடுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–